DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.18/2024**
**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 17- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.4 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | பஜாஜ் பைனான்ஸ் |
| பெயர் | - | சிவக்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சத்தியராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | ஸ்டேல்டேம் | வயது | - | 27/2025 |
| சாதி | - | | | | |

**17-07-2025**

**( 1-ம் எதிரி ஆஜர், 2-ம் எதிரி ஆஜரில்லை)**
(2-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)
(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 -ன் கீழ் தாக்கல் செய்த மனு E-CrImp. No. 850/2025 அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்.)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கில் சம்பந்தப்பட்ட பஸ் எங்கிருந்து வந்தது என்றால் பொள்ளாச்சியில் இருந்து ஷேக்கல்முடி வந்த பஸ் ஆகும். அந்த பஸ் வழக்கமாக தினமும் இரவு 07.20 மணிக்கு ஸ்டான்மோர் ஸ்சனுக்கு வந்து அங்கு பயணிகளை ஏற்றி இறக்கிவிட்டு ஓட்டுனர் நடத்துனர் சாப்பிட்டு விட்டு திரும்பவும் 07.40 மணியளவில் அங்கிருந்து கிளம்புவார்கள் என்றால் 07.40 க்கு பஸ் வரும் 08.00 மணிக்கு அங்கிருந்து பஸ்சை எடுப்பார்கள். சம்பவம் நடந்த அன்று பஸ்சை 09.00 மணிக்கு எடுத்தார்கள் என்றால் நீண்ட நாள் ஆனதால் சரியாக நினைவில் இல்லை. அந்த ஸ்டேன்மோர் ஸ்சங்சன் பேருந்து நிலையத்தில் ஷேக்கல்முடி, வில்லோணி டாப், மானாம்பள்ளி, முருகன் எஸ்டேட்,இஞ்சிப்பாறை, குரங்குமுடி ஆகிய இடங்களுக்கு செல்லும் பேருந்துகள் நிற்கும் என்றால் சரிதான். அந்த பேருந்து நிலையம் அருகே சுமார் 10 கடைகள் இருக்கும் என்றால் சரிதான். அந்த இடத்தில் பொதுமக்கள் எப்போதும் அதிகமாக இருப்பார்கள் கூட்டம் நெறிசலாக இருக்கும் என்றால் சரிதான். கூட்டத்தில் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரியை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்தது இல்லை. அந்த பேருந்தில் தான் நான் வழக்கமாக வால்பாறையிலிருந்து சேடல்டேமில் உள்ள எங்கள் வீட்டிற்கு சென்றுவருவேன் என்றால் சரிதான். அதனால் அந்த பேருந்தில் உள்ள ஓட்டுனர் நடத்துரை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு ஓட்டுனர் நடத்துனரை நன்கு தெரியும் என்பதால் வழக்கமாக ஓட்டுனர் சீட்டிற்கு அருகில் உள்ள சீட்டை எனக்கு ஒதுக்கிவைப்பார்கள் என்றால் சரிதான். எந்த தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை வால்பாறை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். இந்த வழக்கில் போலீசார் வேறு யார் யாரை

விசாரித்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் போலீசார் சொல்லிக் கொடுத்ததை சொன்னேன் என்றால் சரிதான். நான் சொன்னது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 கொடுத்த தவறான புகாருக்கு நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.